நிலைமை ஏற்பட்டு, தீவனங்கள் கிடைக்கவில்லை, ஊரிலேயிருக்கிற சினிமா கொட்டகைகள் வசூலாகவில்லை, பஸ்கள் தேனியிலே நின்றுவிட்டன, கம்பம் வழியாகப் போகவில்லை, யாரிடமும் வருமானமில்லை, விவசாயக் கூலிகள் எட்டணு, ஆறணு கொடுத்தால் வேலைக்கு வருவார்கள்" என்ற நிலைகள்தான் பஞ்சத்திற்கு அறிகுறியாகும். நண்பர் தியாகராஜன் அவர்கள் மாவட்டக்கழகத் தலைவராக இருந்திருக்கிறார்கள். பஞ்சம் பற்றி அவர்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால் கொஞ்சம் மழை யில்லாமல் இருந்தது. கிணறுகள் எல்லாம் வறண்டிருந்தன, செப்டம்பர் வரையில். அதற்குப் பிறகு நல்ல மழை பெய்தது. அவர் களுக்குத் தெரியும். செப்டம்பருக்கு பிறகு அவருடைய வட்டாரத்திலே மழை பெய்தது. வழக்கமாக ஏற்படக்கூடிய அந்த நிலைமை பஞ்சம் என்பதற்கான இலக்கணத்திற்கு உள்பட்டதாகாது. ஜில்லாபோர்டு நிர்வாகம் தெரிந்து நண்பர் தியாகராஜனுக்கு பஞ்சமென்றால் என்ன வென்று நன்கு தெரியும். அவர் கூறியது பஞ்சத்திற்கான நிலைமையில் வரவில்லை.

Seizure of paddy.

*** 197. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :—**

(*a*) whether it is a fact that police entered into the residence of Thiru Nagamani Naicker, in Thulasapuram Kandigai village in Sriperumbudur taluk of Chingleput District and seized paddy while he was away from his residence on 21st September 1967 ;

(*b*) the reasons therefor ; and

(c) the result of the case filed against the Government by Thiru Nagamani Naicker in the High Court in this regard ?

நெல் பறிமுதல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு–வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) செங்கல்பட்டு ஜில்லா, ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, துளசாபுரம் கண்டிகை கிராமத்தில் திரு நாகமணி நாயக்கர் வீட்டில் 21–9–1967 அன்று அவர் இல்லாத நேரத்தில் போலீசார் சென்று நெல் பறிமுதல் செய்தது உண்மையா ?

(இ) காரணம் என்ன ?

(உ) இதுபற்றி உயர்நீதி மன்றத்தில் நாகமணி நாயக்கர் சர்க்கார் மீது போட்ட வழக்கு என்னவாயிற்று ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ–உ) புகார் செய்யப்பட்டபடி சோதனையோ, பறிமுதலோ நடக்கவில்லை. ஆனால், இது சம்பந்தமாக தனிப்பட்ட பிராது ஒன்று நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், இதைப் பற்றி மேலும் தகவல்கள் தருவது பொருத்தமல்ல.

Fire Accidents

*** 198. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Mnister for Food and Revenue be pleased to state :—**

(*a*) the number of houses which caught fire and were reduced to ashes at Nakkala Kottai situated in Kovilpatti Panchayat Union of Tirunelveli District in 1967 ;

(*b*) the loss incurred therein;

[7th March 1968

(c) whether the Panchayat Union passed any resolution and sent to the Government, requesting assistance out of the Chief Minister's Fire Relief Fund ; and

(d) if so, the amount sanctioned ?

தீ விபத்து

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு—வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நக்கல கோட்டையில் தீ பிடித்து 1967-ல் எத்தனை வீடுகள் சாம்பலானது ?

(இ) எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது ?

(உ) இதற்காக முதலமைச்சர் தீ விபத்து நிவாரண நிதியிலிருந்து பண உதவி கேட்டு பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் ஏதேனும் நிறைவேற்றியனுப்பியதா ?

(எ) ஆமெனில், எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

THE HON THIRU K. A. MATHIALAGAN : (a) 26 houses.

(b) Rs. 17,215.

(c) Yes. But proposals have not yet been received by Government.

(d) Does not arise.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய தீ விபத்து நிவாரண நிதியிலிருந்து பணம் வேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டிருக்கிறது. நாம் டெல்லி சர்க்காரை கேட்டு அடிக்கடி தீர்மானம் போடுகிறோமே அதைப் போல பஞ்சாயத்து யூனியன்கள், முனிசிபாலிட்டிகள் அதைப் பின்பற்ற ஆரம்பித்துவிட்டன. இந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு இந்த அரசு என்ன பதில் எழுதியது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தத் தீ விபத்து காரணத்தால் 26 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. அவர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு 60 ரூபாயும், துணிமணிகளுக்காக 20 ரூபாயும், ஆக 80 ரூபாய் விகிதம் 2,080 ரூபாய் கொடுக்கப்பட்டது. முந்திய சர்க்கார் இந்த காரணத்திற்காக வீடு கட்டிக்கொள்ள 30 ரூபாயும், துணிமணிகளுக்கு 10 ரூபாயுமாக 40 ரூபாய் கொடுத்து வந்தார்கள். இந்தப் புது அரசாங்கம் வந்த பிறகு அதை இரண்டு மடங்காக செய்திருக்கிறது. அந்த வகையில் 2,080 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் முதலமைச்சர் தீ விபத்து நிதியிலிருந்து வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை ப்ளாக் டெவலப்மெண்டிற்கு அனுப்பி அதுபற்றிய செயல்குறிப்பு கலெக்டர் அவர்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. எம். எத்திராஜுலு : தீ விபத்து என்பது இப்போது சமூக விரோதிகளால் அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. எல்லோரும் இதனால் பெரும்பாலாகப் பாதிக்கப்படுகிறார்கள். தீ விபத்துகளை தடுக்க அரசாங்கம் புதிய முயற்சி எடுத்து, ஏழைகளுக்கு அவர்கள் கட்டியிருக்கும் குடிசை வீடுகளைப் பிரித்துவிட்டு, தீ பிடிக்காத வீடு கட்ட ஒவ்வொரு நபருக்கும் நபர் ஒருவருக்கு 1,500 ரூபாய் வீதம் கடன் கொடுத்தால் ஆண்டிற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கினால் 7,000 வீடுகள் கட்டலாம். நான்கைந்து ஆண்டுகளில் இந்த திட்டத்தின்படி தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய குடிசைகளை எல்லாம் சீரிய முறையில் கட்ட முடியும். அதற்கு ஒரு ஆண்டு ஒன்றிற்கு இரண்டு கோடி ரூபாய் இந்த அரசாங்கம் ஒதுக்குவதற்கு முன்வருமா ?

7th March 1968]

Mr. CHAIRMAN : Is the Hon. Minister anwerning ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அங்கத்தினர் ரொம்பவும் ஆசைப்படுகிறார்கள். உறுப்பினர் சொல்வது போல் கட்டிக் கொடுப்பது சுலபமாக இருந்தால் இந்த அரசாங்கம் நாளைக்கே வீடுகளைக் கட்ட ஆரம்பித்துவிடும். இது அவ்வாறு செய்யக் கூடிய காரியமல்ல. ஏழை மக்கள் நல்ல வீடுகளில் வாழவேண்டும். எவ்வளவு தூரம் அவர்களுக்கு செய்ய வேண்டுமென்பதில் இந்த அரசாங்கம் அதிக அக்கறை கொண்டிருக்கிறது. சாத்திய கூறானவைகளை நிறைவேற்ற வசதிகளைக் கொண்டு இந்த அரசாங்கம் செய்வதற்கு யோசனை செய்யும்.

திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் : முதலமைச்சர் அவர்களின் நிதியில் எவ்வளவு இருக்கிறது ? அதில் எவ்வளவு செலவாகியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனியாகக் கேட்க வேண்டிய கேள்வி. அப்போது தான் தகவல் சொல்லப்படும்.

Mr. CHAIRMAN : The Hon. Minister is in good form to-day.

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Sir, I am always in good form (laughter).

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : எதிர்பாராத விதத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் உண்டாகும் இழப்புகளுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட தொகை போதாது என்று சேர்த்துக் கொடுக்கப்பட்டதற்கு நன்றி. இப்போது கொடுக்கிற தொகையை போதுமென்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ? அல்லது ஓரளவு இன்னும் இரட்டித்துக் கொடுக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

MR. CHAIRMAN : கேள்வி எங்கெங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கத்திற்கு எவ்வளவோ செய்யவேண்டுமென்ற ஆசையிருக்கிறது. பிரத்தியட்ச நிலைக்கு ஏற்ப செய்யப்படும்.

Distribution of sugar, rice and dhall

* 199 *Q*.—**Thiruvalargal P. ETHIRAJ and N.R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the procedure adopted by the Go vernment for ditributing essential foodstuffs like sugar, rice and dhall to all the villages—

சர்க்கரை, அரிசி, பருப்பு வினியோகம்.

திருவாளர்கள் **பி. எத்திராஜ், என். ஆர். தியாகராஜன்** : மாண்புமிகு உணவு-வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சர்க்கரை, அரிசி, பருப்பு போன்ற அத்யாவசியமான உணவுப் பொருள்களை எல்லா கிராமப் பகுதிகளிலும் சீராக வினியோகிக்க அரசு கையாளும் முறை என்ன—

The Hon. Thiru K. A. MATHIALAGAN : A system of informal rationing has been introduced in rural areas of this State. Fair Price Shops have been opened wherever necessary in deficit pockets, vulnerable areas and urban centres, where there is concentration of population. Rice is the main item distributed through these shops. Wheat, wheat products and sugar are also distributed to the public through these shops. Dhall is also